கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நெய்வேலியில், மாவட்ட கழக அவைத் தலைவர் கொ. நந்த கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார். இதில் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி ,பண்ருட்டி, தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் ,கலந்து கொண்டனர், கடலூர் மேற்கு மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியாக கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கழகப் பேச்சாளர் சீரணி சண்முகம் மறைவு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 27 - பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய 'சீரணி படை'யில் சேர்ந்து, அன்று முதல் கழகக் கொள்கைகளை தமிழகத்தின் பட்டி தொட்டி யெங்கும் பரப்பிய கழகச் சொற் பொழிவாளரும் - 1974ஆம் ஆண்டு ஆயிரம்விளக்கு தொகுதி சீரணித் தலைவராக பொறுப்பு வகித்தவரும் - முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி ஆகியோரின் அன்பைப் பெற்றவருமான சீரணி ச.சண்முகம் (வயது 84) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (26.10.2024) மறைவெய்தினார். மறைந்த கழகப் பேச்சாளர் சிரணி சண்முகம் உடல் மீது கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, அமைச்சர் தா. மோ.அன்பரசன் மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

தலைமைக் கழகப் பேச்சாளர், கழக மூத்த முன்னோடி மறைந்த ச.சீரணி சண்முகம் அவர்கள் உடல் மீது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். அருகில் ஒன்றியச் செயலாளர் எம்.டி.லோகநாதன் உள்ளார்.

சென்னை - 48, வண்டலூர் அருகே மண்ணிவாக்கம் ராஜாத்தி கலைஞர் நகரில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக நிர்வாகி ஆர்.பத்மநாபன், காட்டாங்குளத்துர் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் மண்ணிவாக்கம் எம். டி.லோகநாதன், ஒன்றிய முன்னாள துணைச் செயலாளர் ம.வே.பொன்னுசாமி, மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ. லோகநாதன், ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் மண்ணிவாக்கம் கார்த்தி, இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ், ஊராட்சி மன்ற கவுன்சிலர்கள் தெய்வசிகாமணி, குமார் மற்றும் கழகத் தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

பூவிருந்தவல்லி தொகுதி பார்வையாளர்கள் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் சா.மு.நாசர் சிறப்புரை- ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ - பி.டி.சி.செல்வராஜ் பங்கேற்பு

திருவள்ளூர், அக்.27: திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பங்கேற்கும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் வேப்பம்பட்டியில் உள்ள எம்.கே.என் பேலஸில் நடைபெற்றது.

திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பிரேம் ஆனந்த் வரவேற்றார். ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் ஆர். ஜெயசீலன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், டி.தேசிங்கு, ப.ச. கமலேஷ், தங்கம் முரளி, ஜி.ஆர். திருமலை, தி.வே.முனுசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்புரையாற்றினார். இதில் ஆ.கிருஷ்ணசாமி எம். எல்.ஏ. மாநில தொழிலாளர் அணி செயலாளரும் பூந்தமல்லி தொகுதி பார்வையாளருமான பி.டி.சி. செல்வராஜ் பங்கேற்றனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில், அமைச்சர் சா. மு.நாசர் பேசும்போது, இந்த தேர்தலில் பாக முகவர்கள் (பிஎல்ஏ2) பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது. ஒரு மரத்தில் இலை, கிளை, பூ, காய், கனி என அனைத்தும் வெளியே தெரிந்தாலும் அதனை தாங்கி நிற்பது பூமிக்கு அடியில் மறைந்திருக்கும் வேர் தான்.

அதே போல தான், எம்எல்ஏக்களாகவும் எம்பிக்களாகவும் அமைச்சர்களாகவும் நாங்கள் வலம் வந்தாலும் பாக முகவர்கள் சிறப்பாக செயல்பட்டால் மட்டுமே எங்களால் இந்த பதவிகளில் அலங்கரிக்க முடியும். எனவே ஒரு மரத்திற்கு வேர் எவ்வளவு முக்கியமோ அதுபோல பாக முகவர்கள் (பி எல் ஏ 2) களும் மிக முக்கியமானவர்கள். எனவே சிறப்பாக பணியாற்றுங்கள் உங்களுக்கு திமுகவில் பொறுப்புகள் தானாக தேடி வரும்.

இவ்வாறு அமைச்சர் நாசர் பேசும்போது தெரிவித்தார்.

மேலும் இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்: 2026ல் சட்டமன்ற தேர்தல் வர இருப்பதால் அதற்கான தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி செயல்பட வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 112025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திடவும், புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29102024 அன்று வெளியிடவும் உள்ளது.இதன படிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும். வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க படிவம் 6ஏ. ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணயதளத்திலும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த , சட்டமன்ற உறுப்பினர். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள். மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள். அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளை கழக செயலாளர்கள். பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதி கள் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (பிஎல்ஏ2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரிஸ்ரீதர், பா. நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வி. குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி ஜெயசீலி ஜெயபாலன், எம்.பர்கத்துல்லாகான், பரமேஸ்வரி கந்தன், க.ஸ்ரீதரன் இந்திராபொன்குணசேகர் டி.தென்னவன் ஏஜி.ரவி, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஞா.ரமேஷ், மு.ராஜா, மகேஸ்வரி பால விநாயகம், குட்டி(எ) பக்தவத்சலம், ஆர். திலிப்ராஜ், ப.இம்மானுவேல், கி.தரணி,

கே.கே.சொக்கலிங்கம், கே. சீனிவாசன், தா.தயாளன், டி. எம்.ராமசந்திரன், எஸ்.மனோகரன், மதுரைவீரன், கே.விமலாகுமார், எஸ்.வேலு, ஜெ.சாக்ரடீஸ், வி.சுமதி, ஜி.சுகுமார், மு.குணசேகரன், பா.கந்தன், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், வி.பி. பிரகாஷ், எம்.இளையான், ஏ. ஜனார்த்தனன், பி.ஜி.முனுசாமி, சுப்பிரமணி, நாகலிங்கம், உமா சீனிவாசன், லோகநாதன், ஜி.பாஸ்கர், கே.ஜி.அன்பு, தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மண்ணன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியக் கோட்டி, அன்பழகன், சௌந்தரராஜன், வி.எம்.நாகதாஸ், மு. குமார், தி.கோ.செல்வம், வேந்தன், அருள், கே.பாஸ்கர், டி.பன்னீர் செல்வம், எஸ்.பார்த்திபன், உட்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக வழக்கறிஞர்கள் பாக முகவர்கள் கலந்து கொண்டார்கள் முடிவில் மாவட்ட பிரதிநிதி இ.என்.சேகர் நன்றி கூறினார்.

சிறப்பு வாக்காளர் சரிபார்க்கும் பணிகள் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தொகுதி பார்வையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தின் நடைபெறும் சிறப்பு வாக்காளர் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியலில் சரிபார்க்கும் பணிகளின் குறித்து (திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்ற தொகுதி பார்வையாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ) எனது தலைமையில் திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ. சேகர் திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன் ஆகியோர் முன்னிலையில் திருத்தணி நகரத்தில் உள்ள திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (27-10-2024 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 3 மணியளவில் நடைபெறுகிறது இக் கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழகங்களில்நியமிக்கப்பட்டுள்ளபொறுப்பாளர்கள்தவறாமல்கலந்துகொள்ளும்படிகேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.